# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,
## விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, ஒற்றோபர் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2022 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,**
**விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டம்**

[*2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.- ஓ. 49/2021*

**(60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*60 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"விருப்பாவணம் ஒன்றின் மூலம் ஆவணத்தைக் கையுதிர்த்தல்*

2. (1) பதினெட்டு வயதை அடைந்துள்ளவரும் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவருமான எவரேனுமாள், விருப்பாவண நன்கொடை அளிக்கப்படாவிடின், விருப்பாவண மெழுதிக் கையளிக்கபடாவிடின் அல்லது கையுதிர்க் கப்படாவிடின் அவர் தகுதியானதெனக்கருதக் கூடியவாறாக அவற்றை எடுப்பதிலிருந்து சட்டப்படி இயலாதவராக்கப்படாத அத்தகைய ஆளின் மர புரிமையாளர்கள்மீது வந்தடையக்கூடியவையும், இறக்கும்போது அவருக்குச் சொந்தமாயிருந்தவையு மான எவையேனும் அசைவுள்ள அல்லது அசை வற்ற ஆதனங்களையும் ஏதேனும் ஆதனத்திலுள்ள எல்லா மற்றும் ஒவ்வொரு மரணச்சொத்து, உரிமை, பங்கு அல்லது அக்கறை என்பவற்றை விருப்பாவண மெழுதிக் கையளிக்கின்ற மற்றும் கையுதிர்க்கின்ற விருப்பாவணமொன்றை நிறைவேற்றுவது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மரணசாதனக்காரரும் அவர் கையுதிர்க்க விரும்பக்கூடியவாறு அத்தகைய மரண சாதன கையுதிர்ப்பை ஆக்குவதற்கும் அத்துடன் அத்தகைய உரிமையைப் பிரயோகிக்கையில், இப்போது அல்லது இதுகாலவரையில் இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்துக்கு, பயன்பாடுக்கு அல்லது வழக்காற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப் பினும் எவரேனும் பிள்ளையை, பெற்றோரை, உறவினரை அல்லது வழியுரிமையாளரை தவிர்ப்பதற்கான, வழியுரிமையை இல்லாதாக்குவதற் கான அல்லது விட்டுவிடுவதற்கான அல்லது அத்தகைய தவிர்ப்புக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் தவிர்த்து விடுவதற்கும் முழுமை யான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை நீக்குதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை நீக்குதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(2) கூட்டு இறுதிவிருப்பாவணமொன்றில் மரண சாதனக்காரர் ஒருவர் இறப்பதன்மேல், மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மரணசாதனத்தை, இணைத்து மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது நிருவாகத்

தத்துவப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, விடயத்துக்கேற்ப, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XXXVIII அல்லது அத்தியாயம் XXXVIIIஆ இன்கீழ் மரணசாதன வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள, “அதன்மீது நிறுவப்பட்ட கட்டிடங்கள், அத்துடன்” எனும் சொற்களுக்குப் பதிலாக, “அதன்மீது நிறுவப்பட்ட கட்டிடங்கள், கூட்டாட்சியாதனச் சிறுகூறு அல்லது ஏதேனும் காணிச் சிறுகூறு, அத்துடன்” எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*